## 8

# கனத்திற்குரிய புகழ்ச்சி

## (2 கொரிந்தியர் 8:1–9:15)

*"எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து" (8:20).*

இன்றைய நாட்களில் உள்ளூர் சபைக்குழுமம் ஒன்றின் வாழ்வில், சபை நிதிநிலைகள் பற்றிய எந்த ஒரு கலந்துரையாடலும் சாத்தியக்கூறான இரு பதில் செயல்களில் ஏதாவது ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. ஒரு பதில்செயலில், நாம் பணத்திற்கான சபையின் இடையறாத வேண்டுகோள்களாக இருப்பதாகக் காணப்படுபவை மீது சீற்றம் கொள்கிறோம். மற்றொரு பதில் செயலானது, சீற்றத்தைக் காட்டிலும் சலிப்பானதை விளக்கப்படுத்துகிறது. இந்தக் கண்ணோட்டத்தின்படி, நிதிநிலை மீதான வெளிப்படையான எந்த ஒரு கலந்துரையாடலும், தவிர்க்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகவும், சபையின் அதிக முக்கியமான அக்கறையுள்ள விஷயங்களுக்கு ஒரு தேவையற்ற இடையூறாகவும் உள்ளது. சபை நிதிநிலை பற்றிய எந்தக் கலந்துரையாடலுக்குமான இவ்விரு பதில்செயல்களுக்குப் பின்னால், பேசப்படாத யூகம் ஒன்றுள்ளது: சபையின் நிதிநிலை உறுதிப்பாடுகள், மிகச்சிறந்த வகையில், பணம் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் போன்ற ஆவிக்குரியதல்லாத விஷயங்களில் ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கு, தீங்கிழைக்காத திசைதிருப்புதலாக உள்ளன. இந்தக் கண்ணோட்டத்தின்படி, பணமும் நிதிநிலை அறிக்கைகளும் சபையின் ஊழியத்தில் மிகக்கொஞ்சமே செயல்பட வேண்டியுள்ளன என்றாகிறது.

பவுலின் ஊழியத்தைத் தற்காப்பதற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட , இரண்டு கொரிந்தியர் நிருபமானது, பணம் சேர்க்குதல் பற்றி இரண்டு அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இந்தச் சேகரித்தல் என்பது, பவுலின் ஊழியம் முழுவதற்குமான மிக முக்கியமான உறுதிப்பாடுகளில் ஒன்றாக இருந்தது என்பது உறுதி. அவரது ஊழியத்தில் முன்பு அவர், எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களில் ஏழைகளாய் இருந்தவர்களுக்காக நிதிகள் சேகரிப்பதில் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார் (கலாத்தியர் 2:10). பின்பு அவர், கொரிந்தியர்களுக்கான தமது முதல் நிருபத்தில், பணம் சேர்க்குதல் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டார் (16:1, 2). பிற்பாடு அவரது வாழ்வின் திருப்புமுனையான ஒரு கட்டத்தில், ரோமருக்கு அவர் நிருபத்தை எழுதியபோது (ரோமர் 15:22-29), பல ஆண்டுகள் கடந்திருந்தன, சேகரிக்கப்பட்ட பணமானது இன்னமும் எருசலேமுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்படாதிருந்தது. ஆனால் பவுல் அதைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் பணியை விட்டுக்கொடுத்து விடவில்லை, ஏனெனில் இது அவரது வாழ்வின் பிரதான திட்டங்களில் ஒன்றாக இருந்தது. சேகரிக்கப்பட்ட பணத்தை எருசலேமுக்குக் கொண்டுவருதலுக்கு அவர் தமது சுய பாதுகாப்பையும்

இடர்ப்படுத்த மனம் சம்மதியாக இருந்தார்.

பணம் சேகரித்தலானது பவுலுக்குக் கூட்டிச்சேர்ப்பதற்குப் பல ஆண்டுகள் கால அளவை எடுத்துக்கொண்டபடியால் அவர், வெறும் பஞ்சநிவாரணம் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றில் ஆர்வம் கொண்டிருந்தார் என்பது தெளிவு. யூத சபைகளின் பிரயோஜனத்திற்கென்று புறஜாதி சபைகளிடத்தில் இருந்து வரும் பணமானது, சபையின் ஒருமைப்பாட்டை அடையாளப்படுத்துவதாக இருந்தது. அது, சபைகளின் தியாகம், அன்பு மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றை அடையாளப்படுத்தியது. பணத்தைப் பற்றிப் பேசப் பவுல் எவ்வகையிலும் தயக்கம் காட்டவில்லை, ஏனெனில் பணம் நம்மை - நமது உழைப்பை மற்றும் நமது அன்பை - பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை அவர் அறிந்தார். நமது பணத்தை நாம் செலவிடும் வகைமுறையானது, வாழ்வில் நமக்கு எந்த விஷயங்கள் முக்கியமானவைகளாக உள்ளன என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. புறஜாதி சபைகள், எருசலேமில் இருந்த வீட்டு சபைகளுக்காகத் தியாகம் செய்ய முடிந்தது என்றால், அவைகள் அவர்களின் நலத்திற்கான அக்கறையைப் பற்றிய தெளிவான செய்தி ஒன்றை அனுப்பியிருக்கும்.

2 கொரிந்தியர் நிருபத்தில், நிதி உதவி செய்தலுக்கான ஒரு பலத்த வேண்டுகோள் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது, ஏனெனில் இப்புத்தகத்தின் பிரதானமான பகுதி, பவுலின் நேர்மை கேள்விக்குட்பட்டிருந்ததைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பவுல் தமது ஊழியத்திற்காகக் கொரிந்தியர்களிடம் இருந்து எந்தப் பணத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் சிலர் ஐயம் கொண்டுள்ளனர் (11:7-11). கொரிந்தியர்களுக்குப் பாரமாய் இருப்பதைவிட, அவர் குறைவுபட்டபோது மற்ற சபைகளை நம்பி இருப்பதைத் தேர்ந்து கொண்டார் (11:9). இருந்தபோதிலும், பணத்தைப் பற்றிப் பேசும் வேளையொன்று அவருக்கு வந்தது. அவர் தமது முதல் வேண்டுகோளை ஏற்படுத்தி ஒரு ஆண்டு கடந்திருந்தது (8:10). அவர் 8 மற்றும் 9ம் அதிகாரங்களில் தமது வேண்டுகோளை ஏற்படுத்துகிறார், இது அவர் தமக்காக ஏற்படுத்தியதாக இராமல், தமது வாழ்வின் மாபெரும் திட்டங்களுக்காக ஏற்படுத்தியதாக இருந்தது. ஒருவேளை இப்போது அவர், கொரிந்தியர்களிடம் தாம் பணம் கேட்கும் அளவுக்கு நம்பிக்கையானது போதிய அளவில் மீளக்கட்டுவிக்கப்பட்டிருந்தது என்று நம்பி இணங்கியிருக்கலாம். நாம் மிகவும் சலிப்புள்ளது என்று கருதும் வேலைகளாகிய பணம் சேர்க்குதல், விநியோகித்தல், மற்றும் பதிவேடு பராமரித்தல் ஆகியவை அவரது ஊழியத்திற்கு அவசிமானவையாக இருந்தன.

## மாதிரி சபை (8:1-6)

ஏற்புடைய மாதிரிகளைக் கொண்டிருப்பதில் இருந்து அடிக்கடி நாம் பயனடைகிறோம். சிலவேளைகளில் கிறிஸ்தவத் தனிநபர்கள், கிறிஸ்தவ ஊழியத்திற்கு மாதிரிகள் என்ற வகையில் ஊழியம் செய்தும் ஊழியத்தின் அர்த்தத்திற்கு ஒரு உட்கண்ணோட்டத்தை அளித்தும் வருகின்றனர். இவ்வாறே, ஒரு சபைக்குழுமம் முழுமையும், நம்பகத்தன்மை வாய்ந்த ஊழியத்திற்கு ஒரு அறைகூவலை அளிக்க முடியும். இது நமக்குச் சாத்தியமான ஊழியங்கள் எவை என்று நமக்குக் காண்பிக்கவும் மேன்மையான ஊழியத்திற்கு நம்மைத் தூண்டவும் முடியும் 8:1-

*6ல், மக்கெதோனியா சபையானது உதாரகுணத்தில் (8:2) கொரிந்தியர்களுக்கு (cf. ரோமர் 15:26) ஒரு மாதிரி சபையாக உள்ளது. மற்ற ஒவ்வொரு சபையைப் போலவே அவர்களும், "பாடுகளின் சோதனையை" அனுபவித்திருந்தனர் (cf. 1:7; 1 தெசலோனிக்கேயர் 1:6; 2:14). மக்கெதோனியர்கள் குறிப்பிடத்தக்க வகையில் அந்தச் சோதனையில் தேறியிருந்தனர் என்பது அவர்களைத் தனித்துவப்படுத்தியது.*

*மக்கெதோனியா சபை, தற்கால சபைக்குழுமத்திற்கும் ஏற்புடைய மாதிரியொன்றை அளிக்கிறது. அவர்களின் "கொடிய தரித்திரம்" என்பது "அவர்களின் மிகுந்த உதாரத்துவத்தின் செல்வத்திற்குள்" பாய்ந்தோடியதான அவர்களின் உறுதிப்பாட்டின் வலிவார்ந்த தன்மையால் நாம் மனம் ஈர்க்கப்படுகிறோம் (8:2). அவர்கள் "தங்கள் திராணிக்கு மிஞ்சியும்" கொடுத்தனர் (8:3). செல்வச் செழிப்புமிக்க ஒரு சபையை உதாரத்துவமாகக் கொடுக்கத் தூண்டுவது எவ்வாறு என்று வியப்படையும் நாம், தனது மாபெரும் வறுமையில் இருந்தும் மிகுந்த உதாரத்துவமாகக் கொடுத்த சபைக்குழுமத்தைக் குறித்துத் திகைப்படைகிறோம். மக்கெதோனியக் கிறிஸ்தவர்களின் வறுமையானது அவர்களின் கிறிஸ்தவ உறுதிப்பாட்டை விளைவித்தது என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். நியாயமான வகையில் வளமான பகுதியொன்றில் அவர்கள் வறியவர்களாக இருந்தனர். அனேகமாக, அவர்களில் சிலர் தங்கள் கிறிஸ்தவ உறுதிப்பாட்டினால் தங்கள் வேலைகளையும் வருமானத்திற்கான ஆதார மூலங்களையும் இழந்திருக்கலாம். இருந்தபோதிலும், அவர்கள் உதாரத்துவமாகக் கொடுத்தனர்.*

*"உதாரத்துவம்" என்பதற்குப் பவுலின் (haplotes, 8:2 என்ற) வார்த்தை "தனித்தன்மை" என்று நேரடி அர்த்தப்பட்டது. இவ்வார்த்தை கலப்படமான நோக்கங்ளைக் கொண்டிராத ஒருவரின் "இருதயத்தின் தனித்தன்மை" என்று கருத்துத் தெரிவிக்கிறது (cf. கொலோசெயர் 3:22; எபேசியர் 6:5). இது பணத்தைக் கொடுத்தலுக்குப் பயன்படுத்தப்படும்போது, தமது ஒரே ஒரு முன்னுரிமையாக "உதாரத்துவத்தை" அடையாளம் கண்டுகொண்ட ஒருவர் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது (cf. ரோமர் 12:8). இவ்வார்த்தையானது, மக்கெதோனியர்கள் தங்கள் வறுமையிலிருந்தும் மிகுந்த உதாரத்துவமாய் கொடுக்க முடிந்தது ஏன் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது: அவர்கள் "இருதயத்தின் தனித்தன்மை" என்பது, அவர்கள் தங்கள் முன்னுரிமையில் பிரிவுபட்டிருக்கவில்லை என்று அர்த்தப்படுத்திற்று. அவர்களின் உறுதிப்பாடுகள், சபையின் ஊழியம் மற்றும் பிற நாடுதல்கள் ஆகியவற்றிற்கு இடையில் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களின் பணத்தைக் கொடுத்தல் என்பது அவர்கள் வாழ்வின் முன்னுரிமைகளைப் பிரதிபலித்தது. இவ்வாறாக, மக்கெதோனியர்கள் நமக்கு ஒரு மாதிரியாக உள்ளனர் மற்றும் தனித்த சிந்தனையுடன் இலக்கை நாடுதல் என்பதில் இருந்தே உதாரத்துவமாகக் கொடுத்தல் வளருகிறது என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாகவும் உள்ளனர். பொருளாதார ரீதியான புதிய அனுகூலம் ஒவ்வொன்றையும் காத்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்திற்கும், கிறிஸ்துவின் நிமித்தமான தங்கள் உறுதிப்பாடுகளுக்கும் இடையில் பிரிவுபட்டிருப்பவர்களின் கவனமானது, தங்கள் சார்புடைய செல்வச்செழிப்பிலும்கூட உதாரத்துவமாகக் கொடுப்பதைச் சாத்தியமற்றதாகக் காணும். "தனித்த சிந்தை" உடையவர்கள் தங்கள் வறுமையில் இருந்து கொடுக்கின்றனர்.*

*நாம் நிதிநிலைகள், திட்டங்கள், பிணைபட்ட கடன்கள் மற்றும் நிதிநிலைக் கட்டுப்பாடுகள் பற்றிப் பேசுகிறபோது உண்மையில் நாம் உற்சாகமுள்ள வேறு எந்தநிதிநிலை முயற்சிகளையும் விவரிக்கும் அதேவழியில் உள்ள தன் விளைவாகவோ நாம் உற்சாகமாகக் கொடுப்பதில் தோல்வியடைகிறோம் என நான் சந்தேகப்படுகிறேன். இந்த மொழிநடையானது, சபையின் நிதிநிலைகள் "ஆவிக்குரியதல்லாத" விஷயங்கள் என்ற வகையில் நினைப்பதற்கு நம்மை வழிநடத்துகிறது. இதன்மீது நாம் தொடக்கால சபையில் இருந்து மதிப்புள்ள பாடம் ஒன்றைக் கற்றுக்கொள்ள முடியும், ஏனெனில் தொடக்காலக் கிறிஸ்தவர்கள் தங்களின் கொடுத்தலை விவரிக்கச் சாதாரண வருவாய் ரீதியான மொழி நடையை ஒருக்காலும் பயன்படுத்தியது இல்லை. மக்கெதோனியர்கள் "பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்" (8:4) என்பது குறிப்பாக மனதை ஈர்க்கக்கூடியதாக உள்ளது.* NIV *வேதாகமம் இவ்வசனப்பகுதியை, "பரிசுத்தவான்களுக்கான இந்த ஊழியத்தில் பங்கேற்கும் சிலாக்கியம்" என்று தரவழைக்கிறது. பணம் சேகரித்தல் என்பது வெறும் நிதி நிலைசார்ந்த கடப்பாடாக மாத்திரம் இருக்கவில்லை; அது "பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்தலை" உள்ளடக்கியது. "உபகாரம்" அல்லது "ஊழியம்"* (NIV; NEB) *என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொல்லான diakoniat என்பது புதிய ஏற்பாட்டில் "ஊழியம்" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக உள்ளது.*

*"ஊழியம்"* (*diakonia*) *என்பது புதிய ஏற்பாட்டில் ஒரு முக்கியமான வார்த்தையாக இருந்தது. தோற்றத்தில் இவ்வார்த்தை சுயத்தைத் தாழ்த்தும் ஒரு செயலைக் குறித்தது: உணவுமேஜையருகில் காத்திருந்து உணவைப் பரிமாறுதல். இது வீட்டு வேலையாள் தனது எஜமானருக்காக வாழ்தல் என்ற வகையில் மற்றவர்களுக்காக வாழ்தலை உள்ளடக்கியது. இயேசு, மற்றவர்களுக்கு ஊழியர் என்ற வகையில் வந்ததினாலும் (மத்தேயு 20:28), தமது சீஷர்கள் ஒருவர் மற்றவருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்று வேண்டிக்கேட்டுக் கொண்டதினாலும் (லூக்கா 22:26) இவ்வார்த்தைக்கு ஒரு கண்ணியத்தைக் கொடுத்தார். Diakonia வாக இருத்தல் என்பது அவரது சீஷர்களின் அடையாள மாக இருந்தது, இது ஒருவரையொருவர் கட்டியெழுப்புதலின் சுயநலமற்ற ஊழியமாக இருந்தது. ஊழியம் என்பது மற்றவர்களுக்கு அன்புடன் ஊழியம் செய்தலாக உள்ளது* (cf. *1 கொரிந்தியர் 16:15; எபிரேயர் 6:10; பிலேமோன் 13; 2 தீமோத்தேயு 1:18).*

*புதிய ஏற்பாட்டின்படி, ஊழியம் செய்யப் பலவழிகள் உள்ளன. "ஊழியத் தின் வேலை" என்பது முழுசபையின் பணிப்பொறுப்பாக உள்ளது (எபேசியர் 4:12). பவுல், "ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே" என்று கூறுகிறார் (1 கொரிந்தியர் 12:5). பணத்தைக் காணிக்கையாகக் கொடுத்தல் என்பது ஒரு முக்கியமான ஊழியமாக உள்ளது. மக்கெதோனியர்கள், எருசலேம் சபைக்கு உதவுதலில் பங்கேற்க விரும்பியபோது, இங்கு அவர்கள் சபையைக் கட்டியெழுப்பும் ஊழியம் ஒன்றைக் கண்டனர். சேகரித்த பணத்தைப் பவுல் எருசலேமுக்கு எடுத்துச் சென்றபோது, அவர் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ய விரும்பினார் (ரோமர் 15:25). இனியும் நாம் நமக்காக வாழ்வதில்லை என்று நாம் காண்பிக்கும் ஊழியத்தின் பலவகைகள் உள்ளன (5:15). மக்கெதோனியர்களைப் போலவே நம்மையே நாம் கர்த்தருக்கென்று*

கொடுத்துள்ளதை (8:5)ச் செயல்விளக்கப்படுத்தும் பலவழிகளில், காணிக்கை கொடுத்தல் என்பதும் ஒருவழியாக இருக்க வேண்டும்.

காணிக்கை கொடுத்தலில் நாம் பங்கேற்கும்போது, நாம் "ஊழியம் செய்கிறோம்" என்றால், எல்லா ஊழியங்களும் சிலவழிகளில் பிறருக்கு ஊழியம் செய்வதை அர்த்தப்படுத்துகின்றன என்ற உண்மையின் கண்ணோக்கை சபை இழந்துபோகாதிருக்கக் காரணம் ஒன்றுள்ளது. புதிய பதிவேடுகள் அமைப்பதற்கு அல்லது நமக்கு நாமே நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கு மாத்திரம் நாம் காணிக்கை கொடுப்பதில்லை. ஒவ்வொரு ஊழியமும், மற்ற வர்களுக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தவருடைய ஊழியத்தைத் தொடருவதையே நோக்கங்கொண்டுள்ளது. "நம்மையே ஒப்புக்கொடுத்தல்" என்ற நமது உறுதிப்பாட்டுடன் நமது அத்தியாவசியமான ஊழியங்கள் தொடங்குகின்றன என்ற உண்மையை, நம்மில் பலர் உணர்ந்தறிகிறோம்: பேரழிவிலிருந்து நிவாரணத்திற்கு விசேஷ காணிக்கை, நமது பிள்ளைகளுக்குப் போதிக்கப் பொருட்கள் சுவிசேஷ ஊழியர்களுக்காக, மற்றும் ஊழியப் பணிக்காக திட்டங்கள், திட்டக்குழுக்கள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளில் பங்கேற்றல் மட்டு மின்றி, மன எழுச்சிமிக்க ஊழியங்களில் பங்கேற்கவும், மக்கெதோனியர்கள் கொண்டிருந்தது போன்றே, நாமும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளோம்.

## அன்பின் நிரூபணம் (8:7-15)

மக்கெதோனியர்கள் தங்களையே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தி ருந்ததைச் செயல்விளக்கப்படுத்தியிருந்ததன் மூலம் (8:5) அவர்கள் தங்கள் பரீட்சையில் தேறியிருந்தனர் (cf. 8:2). இப்போது பவுல், கொரிந்தி யர்களின் அன்பினுடைய "நிரூபணத்தை" கொடுக்க அவர்களிடமாய்த் தி ரும்புகிறார் (8:7, 8). NIV வேதாகமத்தில் உள்ளபடி, "உங்கள் அன்பை ம ற்றவர்களின் உண்மைத்தன்மையுடன் ஒப்பிடுவதன்மூலம், உங்கள் அன்பின் உண்மைத் தன்மையைப் பரிசோதிக்க நான் விரும்புகிறேன்." ஆழமான ஒப்புக்கொடுத்தலும் பிரியமும் உள்ளதென்று மாத்திரம் உரிமைகோருதல் போதுமானதல்ல, ஏனெனில் அன்பு என்பது எப்போதுமே, மற்றவர்களுக்காகத் தியாகம் செய்வதற்கு நமது மனவிருப்பம் என்பதில் பரிசோதிக்கப்படுகிறது. இது மாய் மாலமாகக் கூடும் (ரோமர் 12:9). பவுல் ஏற்கனவே கொரிந்தியர்கள் மீதான தமது அன்பைப் பலமுறை அவர்களைச் சென்று பார்த்தது, நிருபங்கள் மற்றும் உறக்கமற்ற இரவுகள் ஆகியவற்றின் மூலம் காண்பித்திருந்தார் (cf. 2:4; 6:6). நம்மை ஐசுவரியவான்கள் ஆக்குவதற்காகக் கிறிஸ்து "நம் நிமித்த மாக" தமது ஐசுவரியத்தை விட்டுக்கொடுத்திருந்ததன்மூலம் தமது அன்பைச் செயல் விளக்கப்படுத்தியிருந்தார் (8:9). உண்மையான அன்பு என்பது எப்போதுமே, மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் உண்மைக் கிரியைகளில் காணக்கூடியதாக உள்ளது. இதன்விளைவாகப் பவுல், "ஆதலால் உங்கள் அன்பையும், நாங்கள் உங்களைக்குறித்துச் சொன்ன புகழ்ச்சியையும், சபைகளுக்கு முன்பாக அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்துங்கள்" என்று கூறுகிறார் (8:24). கொரிந்தியர்கள் மக்கெதோனியர்களில் பெற்றிருந்தது போன்று, ஊழியத்திற்கு ஒரு நல்ல மாதிரியைப் பெற்றிருத்தல் என்பது ஒரு சபைக்கு நல்லதாக உள்ளது. ஆனால் நமது அன்பு மாயமற்றது என்பதற்குச் செயல்விளக்கம் ஒன்றைக் கொடுப்பதன் மூலம் நாமே *ஒரு மாதிரியாகும்* காலம் ஒன்றுள்ளது.

கொரிந்தியர்களுக்குப் பவுல் விடுத்த அறைகூவலை நாம் வாசிக்கும்போது, அவர்களுடன் நம்மை அடையாளப்படுத்த முடியும். நம்மில் பெரும்பான்மை யானவர்கள், மக்கெதோனியர்களைப் போன்று, அன்பார்ந்த ஊழியத்தில் மற்ற வர்களுக்காக நம்மையே வெறுமையாக்குவதன் மூலம் "பரீட்சையில் தேறியிருப்பது" இல்லை. கொரிந்தியர்கள் தங்கள் பல விவாதங்களுக்கு மத்தி யில், சபையின் நோக்கத்தை நினைவில் வைத்திருந்ததை நிரூபிக்கும்படிக்கு அறைகூவல் விடப்பட்டிருந்தனர். நூற்றாண்டுகளினூடே, மற்றவர்களினிமித்த மாக "தரித்திரராகுதல்" என்ற இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுதல் என்பதே தங்கள் பணிப்பொறுப்பாக உள்ளது என்பதை நினைவில் கொண்டிருந்த மாபெரும் சபைகள் ஒருசில மாத்திரமே இருந்துள்ளன. தனிநபர்களைப் போன்றே சபைகளும் "தங்களுக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்த"வும் அதி காரம் மற்றும் செல்வாக்கைச் செயல்படுத்தவும் சோதிக்கப்படுகின்றன. சிலவேளைகளில் சபையானது, தனது சொந்த மக்களுக்குப் பொழுதுபோக்கை அளிக்கவும் அவர்களுக்கு ஒரு வசதியான இடத்தை அளிக்கவுமே நிலைத்தி ருக்கும் ஒரு சமூக சங்கத்தைப் போல காட்சியளிக்கிறது. பிரதிபலிக்கிறது. கொரிந்தியர்களைப் போல் நாமும் பரீட்சையை எதிர் கொள்கிறோம், இதில் பல சபைகள் தவறியுள்ளன. நம் நிமித்தமாக "தரித்திரர் ஆனபோது" இயேசு செயல்விளக்கப்படுத்திய அன்பின் ஊழியத்தை நமது சபை வாழ்வில் நாம் திரும்பச் செயல்விளக்கப்படுத்துகிறபோது, நாம் பரீட்சையில் தேர்ச்சியடைகிறோம்.

## எந்த விமர்சனத்தையும் தவிர்த்தல் (8:17-24)

காணிக்கைகளைக் கேட்பவர்கள், மற்றவர்களின் தியாகமான கொடுத்தலை, தங்களை ஐசுவரியவான்கள் ஆக்கிக்கொள்ளத் தவறாகப் பயன்படுத்துகின்றனரோ என்ற சந்தேகத்தின்கீழ் இயல்பாகவே வருகின்றனர். இந்த சந்தேகமானது அடிக்கடி மதநிறுவனங்களில் உள்ள மதிப்பைக் கெடுக்கும் செயல்களினால் மறுவலிவூட்டப்படுகிறது. ஊடகமானது, மதரீதியாக வரிவிலக்குப் பெறும் நிறுவனங்கள், நிதிவசூல் செய்யத் தங்களின் மிக வசதி யான கருவிகளைப் பயன்படுத்துகின்றன என்று பொதுவாக அறிவிக்கின்றன. பின்பு அந்த வருவாயில் பெருவாரியான பாகமானது இன்னும் அதிக நிதி களை வசூலிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பல நிகழ்வுகளில், நிறுவனமா னது நிதிகள் வசூலிப்பதைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் இருப்ப தில்லை என்பதாகவே தோன்றுகிறது. பெறப்பட்ட நிதிகள், ஊழியத்தின் வேறெந்தச் செயல்பாட்டைக் காட்டிலும் நிதி வசூலுக்கென்றே அதிகமாகச் செலவிடப்படுகிறது.

சட்டப்பூர்வமான ஊழியமானது பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறதோ என்ற சந்தேகத்தைத் தவிர்க்க இயலாது. இந்த "மிகுதி யான தர்மப்பணம்" (8:20) எழுப்பக்கூடிய சந்தேகங்களைக் குறித்துப் பவுல் முற்றிலுமாக அறிந்திருக்கிறார். தற்செயலாக உற்றுநோக்குபவர், பவுலின் நேர்மையைக் குறித்து ஏற்கனவே கேள்வியெழுப்பியுள்ள ஒருவரிடத்தில் கூறுவதற்கு ஒன்றுமற்ற நிலையில், பவுலின் ஊழியம் சட்டப்பூர்வமானது என்று எவ்வாறு உறுதியாயிருப்பார்? பணத்தைக் கையாள்வதில் அவரது நேர்மை யைப்பற்றிய கேள்வியைப் போன்று முக்கியமான கேள்வியைக்குறித்து அவர்

அஜாக்கிரதையாக இருந்துவிடக்கூடாதென்ற நிலையில் தோற்றம் அளிக்கிறார். அவர் பணத்தைத் தனியாகக் கையாளவில்லை. கடினமான சூழ்நிலைகளில் உறுதிப்பாட்டை ஏற்கனவே காண்பித்திருந்த தீத்துவை, கொரிந்தியர்களிடத்தில் அவர் அனுப்புகிறார் (7:5-16). தீத்துவுடன், தமது பிரசங்கத்திற்காக "சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரன்" (8:18) என்று மாத்திரம் அடையாளப்படுத்தப்பட்ட ஒருவர் அனுப்பப்பட்டார். சகோதரரின் நம்பகத்தன்மையானது, அவர்மீது நம்பிக்கைவைத்த சபைகளினால் அவர் குறிப்பாக நியமிக்கப்பட்டார் என்ற உண்மையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மூன்றாவது துணையாளர் ஒருவர், "நம்முடைய சகோதரன்" என்று மாத்திரம் அடையாளப் படுத்தப்படுகிறார் (8:22). அவரும்கூட "சோதிக்கப்பட்டு உண்மையுள்ளவர் என்று கண்டறியப்பட்டவராக" இருந்துள்ளார். இம்மனிதர்கள் யாவரும் "சபைகளுடைய ஸ்தானாபதிகளாக" (8:23), அவர்களின் நேர்மையானது ஒருக்காலும் கேள்விக்குள்ளாகாது இருந்தவர்களாக உள்ளனர்.

8:20, 21ல் பவுல், சபைப் பணத்தைக் கையாள்வதில் தாம் ஏன் விரிவான முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டார் என்று கூறுகிறார். அவரது வார்த்தைகளை, NIV வேதாகமம், "இந்த மிகுதியான தர்மப்பணத்தை நாங்கள் நிர்வாகம் செய்யும் வகையைக்குறித்து எவ்விதமான விமர்சனத்தையும் தவிர்க்க நாங்கள் விரும்புகிறோம்" என்று தரவழைக்கிறது (8:20). நம்பகத்தன்மை வாய்ந்த ஒரு ஊழியர் நேர்மையுடன் செயல்பட்டால் மாத்திரம் போதாது, ஆனால் அவர் தமது நேர்மையைக் குறித்து எவ்வித சந்தேகத்தையும் விட்டுவைக்கக்கூடாது என்பதைப் பவுல் அறிந்தார் (cf. 8:21). இதேபோன்ற மொழிநடையில் அவர் 6:3ல், "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் ..." என்று கூறியிருந்தார். 8:19, 20ல் பவுல், தமது ஊழியம் பணத்தைக் கையாள்வதை உள்ளடக்கியிருக்கிறது என்பதைப் புரிந்துணர்கிறார். சொல்லப்போனால் இவ்விரு வசனங்களிலும் *diakoneo* ("ஊழியம்") என்ற வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது NIV வேதாகமத்தில் "நிர்வகித்தல்" என்று தரவழைக்கப்பட்டுள்ளது. சபை முழுவதும் ஒரு ஊழியத்தில் பங்கேற்கலாம், ஆனால் சிலர் பணம் சேகரித்தல் மற்றும் நிதியை விநியோகித்தல் என்ற ஊழியத்தைக் கொண்டுள்ளனர்.

சபையானது, "கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்" என்ற பவுலின் கூற்றினுடைய மதிப்பைப் புரிந்துணருதல் அவசியமாக உள்ளது (cf. நீதிமொழிகள் 3:4). தாராளமாக நன்கொடையினால் "தங்களையே கொடுக்கும்படி" மற்றவர்களை வேண்டிக்கொள்ளுகிற நாம், பணத்தைக் கையாளுபவர்களின் நேர்மைப் பற்றியும் அதைச் சேகரித்து மற்றும் விநியோகிக்கும் நமது முறைமைகளில் உள்ள செயல்திறன் பற்றியும் எழுகிற எல்லாவிதமான சந்தேகங்களையும் நீக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளோம். பொறுப்பற்ற வகையில் நிதிகளைக் கையாள்வதில் பெயர்பெற்றுள்ள ஒரு சபையானது, தாராளமாகக் கொடுத்தல் என்ற ஆவியை அழிக்கும் பாவச்செயலை உருவாக்கும். மற்றவர்களின் பணத்தை அக்கறையின்றிச் செலவிடும் பதிவேட்டைக் கொண்டுள்ள ஒரு சபையானது, கொடுத்தலின் ஊழியத்தில் அடங்கியுள்ள மனவிருப்பத்தையும் அழித்துப்போடும். ஆகவே, பதிவேட்டைக் காக்கும் திறன் கொண்டு, சபையின் கணக்குச் செயல்முறையை மேம்படுத்தி, பணம் எவ்வாறு செலவிடப்பட்டது

என்பதைப் பிறருக்குத் தகவல் அளிப்பவர்களுக்குச் சட்டபூர்வமான ஊழியம் ஒன்றுள்ளது. சபையின் ஊழியத்தை ஆவிக்குரியவை மற்றும் பொருள்சார்ந்தவை என்று நாம் பிரிக்கும்போது, நமது விசுவாசத்தின் முக்கியமான ஒரு அம்சத்தை நாம் காணத்தவறுகிறோம். நிதிகளைக் கையாள்வதில் பவுல் தம்மை ஒரு "ஊழியக்காரராக" கண்டார். சட்டப்பூர்வமான ஊழியமானது, தனது விவேகம் மற்றும் நேர்மை பற்றிய சந்தேகங்களுக்கு வழிநடத்தக்கூடிய எச்சரிக்கையற்ற தன்மையைத் தவிர்க்கிறது.

## பொது ஊழியம் (9:1-12)

ஊக்கமான தொடக்கத்திற்குப் பின்னர் தோல்வியடைகிற ஒரு ஊழியம் நம்மை ஒழுக்கவீனம் அடையச் செய்யக்கூடும். அப்படிப்பட்ட தோல்வியானது, நாம் திட்டமிட்டுள்ள ஊழியத்தைக் காட்டிலும் அதிக அவசரமானவையாகக் காணப்படுகிற சூழ்நிலைகள் மற்றும் பிரச்சனைகளினால் ஏற்படலாம். பணம் சேகரித்தலில் கொரிந்தியர்களின் பணிப்பொறுப்பானது, சட்டபூர்வமான ஊழியம் சற்றுக்காலத்திற்குப் புறக்கணிக்கப்படக்கூடுவதற்கு ஒரு உதாரணமாக உள்ளது. இரு சந்தர்ப்பங்களில் பவுல், தமது வாசகர்களின் விசேஷித்த ஊழியம் ஒரு ஆண்டு காத்திருப்பிற்குப் பின்னரும் செய்து முடிக்கப்படாததாக நிலைத்திருந்தது என்று நினைவுபடுத்துகிறார் (8:10; 9:2). அவர்கள் மா பெரும் திட்டங்களைக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது என்று அவர் நினைவுபடுத்துகிறார்; ஏற்படுத்தப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துதல் என்பது மாபெரும் பணிப்பொறுப்பாகும். அவர், "உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக" என்று கூறுகிறார் (8:11). சபைகள், தைரியமான திட்டங்களை ஏற்படுத்தியுள்ளன, ஆனால் ஒருசில சபைகள் மாத்திரமே அவற்றை முடிவு வரையில் பின்பற்றியுள்ளன.

பழைய திட்டங்களுக்கான உறுதிப்பாட்டைப் பராமரித்தலைக் காட்டிலும் புதிய திட்டங்கள் பற்றிக் கனவுகாணுதல் மிகவும் சுலபமானதாக உள்ளது. நாம் புதியவற்றை விளக்கப்படுத்தும்போது, சாத்தியமானது என்ன என்பதைப் பற்றியெரியும் சொற்றொடர்களில் விவரிப்பதைச் சுலபமானதாக காண்கிறோம். ஆனால் பழைய ஊழியம் ஒன்றிற்கான நமது உறுதிப்பாட்டைக் காண்பிக்குமாறு நமக்கு ஆணையிடப்படுகிறபோது, "பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய தர்மசகாயத்தைக்குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை" என்று பவுலுடன் சேர்ந்து நாம் கூறியாக வேண்டும் (9:1). இவ்வசனம், "உங்களுக்கு *எழுதிக்கொண்டே இருப்பது* அளவுக்கு மீறியதாக இருக்கிறது" என்று தரவழைக்கப்பட முடியும். ஊழியம் (*diakonia,* 9:1) என்பது முன்னதாகவே விளக்கப்பட்டுள்ளது; அதில் புதுதானது ஒன்றுமில்லை.

புதுமையை இழந்துள்ள ஒரு ஊழியத்தை நாம் எவ்வாறு பராமரிக்கிறோம்? பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதுகையில், அவர்கள் பிற சபைகளுக்கு முன்னால் தம்மை சங்கடப்படுத்திவிடுவார்களோ என்று அவர் அச்சமுற்று இருக்கலாம் என்று சந்தேகப்படுகிறேன். ஒரு ஆண்டிற்குப் பின்பு, இந்தத் திட்டத்தில் இப்போது ஒரு விசேஷித்த அவசரம் உள்ளது (9:4). பணம் சேகரித்தல் என்பது ஒரு "ஊழியம்" அல்லது "பணி" என்பதாக உள்ளது என்று அவர்களுக்கு நினைவூட்டுவதன் மூலம் அவர்களை அவர் ஊக்கப்படுத்தத் தொடங்குகிறார் (9:1). பின்பு அவர், இந்த ஊழியத்திற்கான அவர்களின் கடந்தகால உறுதிப்பாடு

மக்கெதோனியர்களை ஏற்கனவே, "எழுப்பிவிட்டிருந்தது" என்று கொரிந்தியர்களுக்குக் கூறலானார். தியாகமான இந்த ஊழியத்திற்கு மாபெரும் மாதிரியான மக்கெதோனிய சபையானது (8:1-7), தொடக்கத்தில் கொரிந்தியர்களின் உதாரணத்தினாலேயே "எழுப்பிவிடப்பட்டிருந்தது" (9:1-5)! சபைகள் ஒன்று மற்றவற்றிடமிருந்து கற்றுக்கொள்கின்றன. சபைக்குழுமத்தின் வாழ்வில் மாறுபட்ட வேளைகளில், அது நல்ல உதாரணமாயிருத்தல் மற்றும் ஒரு நல்ல உதாரணத்தைப் பின்பற்றுதல் என்பவற்றிற்கு இடையில் மாறிமாறிச் செயல்படலாம். ஊழியத்தின் உதாரணத்தை வாழ்வின் வழி என்ற வகையில் ஊழியத்தின் உதாரணத்தை இயேசு நமக்கு அளித்த தருணத்தில் இருந்து, நாம் ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறோம்.

ஊழியங்கள் நல்லதொரு நினைவுக்குறிப்பினால் மேம்படுத்தப்படுகின்றன. அந்த நினைவுக்குறிப்பானது, நாம் ஒரு காலத்தில் கொண்டிருந்த நல்ல செல்வாக்கை நமக்கு நினைவுபடுத்தக்கூடும். நமது உதாரணமானது மற்ற வர்களை ஊக்குவித்ததை நாம் நினைவுகூருகிறோம். ஆகவே, ஒருகாலத்தில் நாம் நடத்துவத்தை அளித்திருந்த ஒரு ஊழியத்தைக் கைவிடுதல் என்பது ஒழுக்கத்தைச் சீர்குலைப்பதாக இருக்கும்.

இப்போது, மக்கெதோனியர்கள் கொரிந்தியர்களுக்கு மாதிரியாக உள்ளனர். 8:2ல் பவுல் அவர்களுடைய அசாதாரணமான தாராளத்தன்மையை விவரித்திருந்தார். "நோக்கத்தில் தனித்தன்மை" என்று அர்த்தப்படுகிற (*haplotes* என்ற) அதே வார்த்தையானது இப்போது 9:11, 13ல் கொரிந்தியர்களுக்கான வேண்டுகோளாகப் பயன்படுத்தப்படுகிறது, இங்கு அது "உதாரகுணம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பவுல், "மக்கெதோனியர்கள் காண்பித்த, ஊழியம் செய்வதற்கான உறுதிப்பாட்டில் அதே தனித்தன்மையை நீங்கள் காண்பிக்க வேண்டிய வேளையாக இது உள்ளது" என்று கூறியிருந்தது போன்றுள்ளது. ஊழியத்தின் இந்தச் செயல்பாட்டில் அவர்களின் பங்கேற்பானது, அவர்களின் முன்னுரிமைகள் உறுதியாக நிலைநாட்டப்பட்டிருந்தது பற்றிய சைகைகளை எல்லா இடங்களுக்கும் அனுப்பும் ஒருவழியாக இருந்தது. உற்சாகமான மனதுடன் கொடுத்தல்மீதான வலியுறுத்தம் (9:7), இயேசுவின் உவமையில் ஒரு நிலத்தை வாங்குவதற்குத் தனக்குள்ள யாவற்றையும் விற்றிருந்த ஒரு மனிதனின் வாழ்வில் இருந்த சந்தோஷத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது (மத்தேயு 13:44). நமது முன்னுரிமைகள் நிலைநாட்டப்பட்டிராதபோது நாம் "சிறுகக் கொடுக்கிறோம்" (9:6). நாம் தனிப்பட்ட நோக்கமுள்ளவர்களாக இருக்கும்போது, நாம் உற்சாகத்துடன் கொடுப்பவர்களாக இருக்க முடியும் (9:7).

நமது தியாகமானது ஒரு நல்ல நோக்கத்தைக் கொண்டுள்ளது என்று புரிந்துணருதலானது தூண்டுவதுபோன்றதொரு தாராளமான பதில்செயலை வேறெதுவும் தெளிவாகத் தூண்டுவதில்லை. பணம் சேகரித்தல் பற்றிக் குறிப்பிடுதலில், பவுலின் சொற்றொடராக்கம் அதன் உண்மை நோக்கத்தைப் பற்றிய சந்தேகம் எதையும் விட்டுச் செல்வதில்லை. பணம் சேகரித்தலை விவரிக்க 9:12ல், "இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை" (*diakonia tes leitourgias*) என்ற விளக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரு வார்த்தைகளும் நடைமுறையில் ஒருபொருள் பலசொற்களாகும், மற்றும் அவைகள், பணம் சேகரித்தல் என்ற விஷயத்தைப் பவுல் எவ்வாறு மதித்தார் என்பதை நமக்கு

நினைவூட்டுகின்றன. *Diakonia* என்பது பணம்தொடர்பான ஊழியம் உட்பட, மற்றவர்களுக்கான எல்லா ஊழியத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. *Leitourgia* என்பது பொதுஊழியத்தின் செயல்பாடுகளுக்கு விசேஷித்த வகையில் பயன்படுத்தப்பட்டது. ரோமர் 15:26, 27ல் இது, பணம்சேகரிக்கும் "ஊழியத்தில்" இருந்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே வார்த்தை, பிலிப்பியர் 2:30ல், எப்பாப்பிரோதீத்து என்பவர் "ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு" தன் பிராணனையும் எண்ணாமல் செயல்பட்டார் என்று பவுல் கூறும் இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## கொடுப்பவருக்கு ஒரு வாக்குத்தத்தம் (9:12-14)

கொடுத்தல் என்ற இந்த ஊழியத்தின் விளைவு என்னவாக இருக்கும்? இந்த ஊழியம் வெற்றியின் எவ்வித அடையாளமும் இன்றி வீணாவதை நாம் விரும்புவதில்லை. கொடுத்தலுக்கான பல அறைகூவல்களையும் நாம் பங்கேற்க விரும்புகிற சட்டபூர்வமான ஊழியங்களையும் பற்றி நாம் நினைத்துப் பார்க்கையில், நமது ஆதாரமூலங்கள் அரிதாகவே மாறுபாட்டை ஏற்படுத்தும் அளவுக்கு மிகவும் அற்பமானவைகளாக உள்ளன என்பதில் நாம் நிச்சயமுடையவர்களாய் இருக்கிறோம். நமது சபைக்குழுமத்தின் மிகக்கொஞ்ச மான ஆதாரமூலங்களைக் கொண்டு, ஒரு நாடுமுழுவதிலும் சுவிசேஷ ஊழியத்தைச் செய்வது என்பது மிகவும் அரிது. எருசலேமின் ஊழியத்திற்குக் கொரிந்தியர்கள் அளித்த சிறு காணிக்கையின் செயல்தாக்கம் குறித்து அவர்கள் இதுபோன்ற கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும். இந்த சந்தேகங்களுக்குப் பவுல், நமது ஆதாரமூலங்களைக் கொண்டு தேவனால் என்ன செய்ய முடியும் என்று நினைவூட்டுதலைக் கொண்டு பதில் அளிக்கிறார். ஒரு விவசாயி, தான் விதைத்திருந்ததைக் காட்டிலும் தனக்குக் கிடைக்கும் விளைச்சல் மிகவும் அதிகமா யிருக்கும் என்று நம்பிக்கை வைப்பதுபோலவே, நமது ஊழியமானது "விதையை விதைத்தல்" என்பதாக மாத்திரம் உள்ளது (9:6). நமது ஆதாரமூலங்கள் அல்ல, ஆனால் தேவனே ஒரு நல்ல அறுவடையை உறுதிசெய்கிறார் (9:10).

இயேசுவின் சீஷர்கள், பசியாயிருந்த ஐயாயிரம் மக்களை எதிர் கொண்டிருந்த வேளையில், அவர்கள் இயேசுவின் பின்வரும் அறைகூவலினால் திகைப்படைந்தனர்: "நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்" (மாற்கு 6:37). இந்த முக்கியமான பணிக்கு அவர்களின் ஆதாரமூலங்கள் போதுமா ன வையாக இருக்கவில்லை என்பது தெளிவு. ஆனால் அவர்களின் அற்பமான ஆதாரமூலங்களை எடுத்த இயேசு, அதைக் கொண்டு அந்தக் கூட்டத்தினருக்கு உணவளித்தார். "எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்" என்பது விளைவாக இருந்தது (மாற்கு 6:42). மட்டான ஆதாரமூலங்கள் அவரது கரத்தில் தேவனுடைய மகிமைக்கென்று பலுகிப்பெருக்கப்பட்டன. நமது ஊழியங்களிலும் இதைப்போன்றவையே நடக்கின்றன என்று பவுல் கூறுகிறார். நாம் மற்ற வர்களுக்கு ஊழியம் செய்வது மாத்திரமல்ல; நமது தியாகமானது, "அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்" என்பதால் (9:12), தொற்றக்கூடியதாக உள்ளது. நாம் கொண்டுள்ளவற்றை நாம் பகிர்ந்துகொள்கிறபோது, தேவனுடைய கிருபை செயல்துடிப்புள்ளதாக இருக்கிறது (9:14).

## முடிவுரை

*பணத்தைப் பற்றி எழுதுதலும் பேசுதலும் ''அளவுக்குமீறியதாக'' காணப்படுகையில் (9:1), நம்பகத்தன்மை வாய்ந்த சீஷர்களிடையில் அதற்கு ஒரு இடம் உள்ளது என்பதைப் பவுல் அறிந்தார். திட்டங்கள் மற்றும் நிதி நிலைகள் பற்றி மாத்திரம் நாம் பேசும்போது, ஊழியங்களின் கண்ணோக்கை நாம் இழந்துபோய், நாம் கொண்டுள்ளவற்றைப் பிறருக்குக் கொடுப்பதினால் "நம்மையே கொடுக்கிறோம்'' என்பதை மறந்துபோகிறோம், நாம் மற்றவர்களுக்குத் தியாகம் செய்யும் கணத்தில், நாம் "இருதயத்தில் தனித்தன்மையை" கண்டறிந்துள்ளோம் என்பதையும் நமது வாழ்வின் முன்னுரிமையையும் செயல்விளக்கப்படுத்துகிறோம்.*